.62

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 05

**EPU5256– ஆரம்பக்கல்விக்கான சிறுவர் உரிமைகள்**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 02.03.2024 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 03.30

---

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. சிறுவர் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் சமவாயத்தினைச் சுருக்கமாக விளக்குக.

2. சுதந்திரத்தின் பின்னர் சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை அரசு அமுல்படுத்தும் உபாயங்கள் ஐந்தினை (05) எழுதுக.

3. 1948 – 2019 ஆண்டு காலப்பகுதியில் சிறுவர் நலன் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்காக இலங்கை அரசு அமுல்படுத்தப்பட்ட சட்டங்கள் ஐந்தினைப் (05) பெயரிடுக.

4. "விசேட சூழ்நிலையில் உள்ள பிள்ளைகள்" என்பதனை வரையறுக்குக. இப்பிள்ளைகளை பாதுகாக்க அரசாங்கம் வகிக்க வேண்டிய பிரதான வகிபாகங்கள் எவை?

5. பிள்ளைகளை தத்தெடுத்தல் தொடர்பான 1941ஆம் ஆண்டு 24ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஐந்து (05) விசேட விடயங்களைக் குறிப்பிடுக.

6. பிள்ளைகள் தொடர்பாக "பங்குகொள்ளும் உரிமை" என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

7. பிள்ளைகளின் உரிமை தொடர்பாக சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் அனுகூலங்கள் ஐந்தினை (05) எழுதுக.

8. பாடசாலை இடைவேளையின்போது மாணவரின் பாதுகாப்பு தொடர்பாக ஆசிரியரின் பொறுப்புக்கள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி II

9. (i) "உயிர் வாழ்தலுக்கான உரிமை" என்றால் என்ன?

**(03 புள்ளிகள்)**

(ii) வீடுகளில் பிள்ளைகளின் வாழ்தலுக்கான உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்கள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

(iii) பிள்ளைகளின் வாழ்தலுக்கான உரிமையைப் பாதுகாக்க பெற்றோர் வீடுகளில் மேற்கொள்ளக் கூடிய உபாயங்கள் ஐந்தினை (05) விபரிக்குக.

**(12 புள்ளிகள்)**

10. (i) "சிறுவர் உரிமைகள்" என்னும் பதத்தினை வரையறுக்க.

(03 புள்ளிகள்)

(ii) இலங்கை சிறுவர்களைப் பாதுகாக்க ஒல்லாந்தர் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(07 புள்ளிகள்)

(iii) இலங்கையில் காலணித்துவ ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட சிறுவர் உரிமையின் நிலையையும் தற்போதுள்ள சிறுவர் உரிமையின் நிலையையும் ஒப்பிடுக.

(10 புள்ளிகள்)

11. (i) ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் என்ற வகையில் இலங்கைப் பாடசாலை சிறுவர்களின் சுகாதாரமும், போசணையும் தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ii) மேலே நீங்கள் குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது எதிர்நோக்கக்கூடிய சவால்களைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(iii) இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியானது ஆரம்பப் பாடசாலை மாணவரின் சுகாதாரத்திலும் போசணையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது"
இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீர்களா? பொருத்தமான உதாரணத்துடன் உமது விடையை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

12. "தற்போதைய காலகட்டத்தில் உலகலாவிய ரீதியில் சிறுவர்களின் பாதுகாப்பிற்கான உரிமை பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது."

(i) பாதுகாத்தலுக்கான உரிமை என்றால் என்ன?

(03 புள்ளிகள்)

(ii) சிறுவர்களின் பாதுகாத்தலுக்கான உரிமை அச்சுறுத்தலுக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் **மூன்றினைச்** (03) சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

(iii) தற்காலத்தில் பாதுகாத்தலுக்கான உரிமையை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா.) மேற்கொள்ளக் கூடிய **ஐந்து** (05) நடவடிக்கைகளை பரிந்துரைக்குக.

(10 புள்ளிகள்)

13. (i) இலங்கையில் சிறுவர் உரிமையினைப் பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் ஒலி, ஒளி ஊடகங்களின் குறைபாடுகள் **மூன்றினையாவது** (03) குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

(ii) இந்தக் குறைபாடுகளுக்கான காரணங்கள் யாவை? உதாரணங்களுடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

(iii) மேலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு பொருத்தமான **மூன்று** (03) ஆக்கபூர்வமான விடயங்களை பரிந்துரைக்க.

(10 புள்ளிகள்)

-முழுப்பதிப்புரிமையுடையது-